**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 100/2025.**
**வழக்கு சாட்சி – அ.சா. 2 (பட்டியல் சாட்சி –3).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முருகேசன். | ஜாதி | |
| தந்தை பெயர் | தங்கையா. | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | வானக்கண்காடு, புதுக்கோட்டை மாவட்டம் | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 43/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2026.

**(1–வது எதிரி ஆஜர். 2, 3, 4 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக பிரிவு 355 BNSS–ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, புதுக்கோட்டை மாவட்டம், வானக்கண்காட்டில் குடியிருந்துகொண்டு, ஓட்டுநராகப் பணிசெய்து வருகிறேன். எதிரிகள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள். எனக்கும், எதிரிகளுக்கும் இடையே கடந்த 2024–ஆம் ஆண்டு ஒரு சிறு தகராறு ஏற்பட்டது. நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் வாக்குமூலம் கொடுத்தோம். வழக்கு நிலுவையிலிருந்தபோது, நாங்களும், எதிரிகளும் சமாதானமாகிவிட்டோம். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியைப் பிறழ் சாட்சியாகப் பாவிக்ககோரி அரசுத் தரப்பில் அனுமதி கோரியதன்பேரில், சாட்சியைப் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது:–</u>**

கடந்த 01.11.2024 ஆம் தேதியன்று, மதியம் அ.சா.1 தோட்டத்திற்குச் சென்றபோது, ராசு, அ.சா.1–ஐ "கிறுக்குப் பயலே" என்று திட்டினார் என்றும், அதற்கு அ.சா.1, அவரை சத்தம் போட்டுவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், பின்னர், 01.30 மணியளவில் அ.சா.1 வீட்டிலிருந்தபோது, எதிரிகள் அ.சா.1–ன்

வீட்டிற்கு வீட்டிற்கு வந்து, அவரைப் பார்த்து அசிங்கமாகப் பேசி, கையில் வைத்திருந்த ஆயுதங்களால் அ.சா.1–ஐத் தாக்கியும், ஆயுதங்கைள் காட்டிக் கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுடன் நாங்கள் சமாதானம் ஆகிவிட்டபடியால் நான் அவர்களைக் காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துப் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.01 16:34:02 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**